# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 05 ஒலி 168 ஆங்கீரச சித்திரை 31 ( 13 . 05 . 1992 ) புதன்


● விண்வெளி தொழில் நுட்ப ரீதியில்

## இந்திய விண்வெளி நிறுவனத்திற்கு அமெரிக்கா இருவருட தடை

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்கும், ரஷ்ய விண் வெளி ஆய்வு நிலையத்திற்கும் எதிராக அமெரிக்கா இரு வருட தொழில் நுட்பத் தடையை அறிவித்துள்ளது. இதன்படி அமெரிக்கா இந்நிறுவனங்களுக்கு இரு வருடங்களுக்கு தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதை நிறுத்திக் கொள்ளும். அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி இந்தியாவும் ரஷ்யாவும் தம்மிடையே ரொக்கட் தொழில் நுட்பங்களை பரிமாறிக்கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை தயாரித்து வரும் இவ்வேளையில் அமெரிக்கா இந்த தடையை அறிவித்துள்ளது. அமெரிக்காவின் இத்தடை குறித்து நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி

... 04 ஆம். பக்கம் பார்க்க

# செட்டிகுளத்தில் ஐந்து நிமிட அதிரடியில்

# 6 காவலரண்கள் தகர்ப்பு 10 படையினர் பலி

## இருவாரத்தில் நடைபெற்ற 6ஆவது தாக்குதல்

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று அதிகாலை புலிகள் நடத்திய 5நிமிட அதிரடித்தாக்குதலில் இராணுவத்தினரின் 6 காவலரண்கள் தகர்க்கப்பட்டன, இதிலிருந்த 10 படையினர் ஸ்தலத்திலேயே பலியாகினர்; எஞ்சியோர் படுகாயமடைந்தனர். 13நவீன துப்பாக்கிகளும், ஆயுத தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

செட்டிகுளத்தில் முதலில் குட்டிப்பகுதியிலிருந்த காவலரண்களே புலிகளின் அதிரடிக்குள்ளாகின

நேற்று அதிகாலை 2.55 மணிக்கு தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மணியளவில் முடிவடைந்தது.

இம்மாதத்தில் முதல் இரண்டு வாரத்தில் புலிகள் நடத்திய ஆறாவது மிகப் பெரும் தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (47(

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

செட்டிகுளம் காவலரண்கள் தகர்ப்பில் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்;

- ரி - 56 துப்பாக்கிகள் - 7
- இதற்கான மகஸீன்கள் - 25
- ரி - 81 துப்பாக்கி - 01
- இதற்கான மகஸீன்கள் - 7
- எல். எம். ஜீ - 3
- இதற்கான மகஸீன்கள் - 9
- 303 துப்பாக்கிகள் - 2
- இதன் மகஸீன் - 01
- ஐ எம் ரவைகள் - 1250
- நேட்டோ ரவைகள் - 200
- 303 ரவைகள் - 70
- ஜே. ஆர் குண்டுகள் - 02
- ரி என். ரி குண்டுகள் - 05
- போரிக் குண்டுகள் - 04
- ரி - 81 துப்பாக்கி ஷெல் - 01
- கிளைமோர் வெடிக்க வைக்கும் சாதனங்கள் - 02
- 7 சோடி சப்பாத்துக்கள்
- கோக்சர்கள் - 14
- ஹெல்மட்டுகள் - 04

## கோமாரிக் கப்பலில் மாவும், சீனியுமே அதிகம்

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நாளை வரவிருக்கும் கோமாரி கப்பலில் அதிகமாக மாவும் சீனியும் எடுத்து வரப்படுவதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

1400 மெ. தொன் மாவும் 1150 மெ. தொன் சீனியும் 425 மெ. தொன் அரிசியும் 100 மெ. தொன் பாமாயில் 8 மெ. தொன் தேயிலையும் எடுத்துவரப்படுவதாக செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 47

## அவுஸ்திரேலியாவில் குடியேறுவோர் 80 ஆயிரமாக குறைப்பு

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டவர் சென்று குடியேறுவதற்கு அனுமதிக்கப்படும் தொகை 31 ஆயிரத்தால் குறைக்கப்படவுள்ளது. இதன்படி 80 ஆயிரம் பேரே இனிமேல் அவுஸ்திரேலியாவில் ஆண்டுதோறும் சென்று குடியேற அனுமதிக்கப்படுவர்.

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்ததகவலின்படி 1992, 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடும்ப அங்கத்தவர்களென 45 ஆயிரம் இடங்களும், தொழில் தேர்ச்சி பெற்றவர்களென 23 ஆயிரம் இடங்களும், அகதிகளுக்கு 10 ஆயிரம் இடங்களும், விசேட தகைமையுடையவர்களுக்கு 1,200 இடங்களும் ஒதுக்கப்படும் என அறியப்படுகிறது.

## கடவுச்சீட்டு விண்ணப்பம் நல்லூரில் இலவசம்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகத்தில் கடவுச்சீட்டு பெறுவதற்கு விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இப்படிவங்களைப் பெற விரும்புவோர் தமது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டுப் பெறுவதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றை சமர்ப்பித்துப் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 06

## கோப்பாய் கலாசாலையின்

## ★ செயலகத்தில் விசேட கூட்டம்

## அபிவிருத்தித்திட்ட அமுலாக்கல் நிதியுதவிகோர முடிவு

இவ்வாண்டிற்கான அபிவிருத்தி திட்டங்களை அமுலாக்க 155 லட்சம் ரூபாவை நிதி அமுலாக்க அமைச்சிடம் கோருவதென நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு

பதி க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், விசேட ஆணையாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

மாநகரசபை நகரசபைகள், பிரதேச சபைகளுக்கு இவ்வாண்டிற்கான திட்டங்களை

## ஐரோப்பிய ஆட்சி மன்றத்தில் பிரிட்டிஷ் பேரரசி உரையாற்றினார்

ஐரோப்பிய நாடுகளின் ஆட்சி மன்றத்தில் முதன் முறையாக பிரிட்டிஷ் பேரரசியார் உரை நிகழ்த்தியுள்ளார்.

பேரரசியாரை ஐரோப்பிய ஆட்சி மன்ற உறுப்பினர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஐரோப்பிய ஆட்சி மன்றத்தில் உரையாற்றுமாறு 1988 ஆம் ஆண்டிலேயே வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் அப்போது பிரிட்டிஷ் தலைமை அமைச்சராக இருந்த மார்கிரேட் தச்சர் அவர்கள் அரசியார் அந்த அழைப்பை ஏற்க முடியாதபடி தடுத்துவிட்டார்.

## எழுதுவினைஞர் வெற்றிடங்கள் செயலகத்தால் கோரப்பட்டுள்ளன

யாழ். மாவட்டத்தில் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 304 பேரில் முதல் தடவையாக 83 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டாலும் எஞ்சிய 221 பேருக்கும் மிக விரைவில் நியமனங்கள் வழங்குவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக யாழ் மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களில் எழுதுவினைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களை உடன் அறிவிக்குமாறும் யாழ். செயலகம் திணைக்களங்களைப் பணித்துள்ளது.

## கோப்பாய் கலாசாலையின் ஆசிரிய பயிலுநர்கள் பகிஷ்கரிப்பு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய பயிலுநர்கள் நேற்று முதல் வகுப்புகளுக்குச் செல்லாது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இவர்களுக்கான மாதாந்த வேதனத்தை காசோலைக்குப் பதிலாக பணமாக வழங்க மறுக்கப்பட்டமை, விடுதி மாணவர் பிரச்சினை, அடிப்படை வசதி வழங்கப்படாமை ஆகிய சில காரணங்களை முன் வைத்தே இப் பகிஷ்கரிப்பு இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## டாக்டர்களுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்தியங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் டாக்டர்களின் தட்டுப்பாட்டை நீக்குமாறு சுகாதார மகளிர் விவகார அமைச்சை யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

(47)

யாழ் மாவட்டம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்டம் சம்பந்தமாக வடகிழக்கு மாகாணசபையினரால் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஆராய்ந்து அனுமதி வழங்குவதற்கான கூட்டம் ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் அரசாங்க அதி

பிரதேச சபைகளுக்கு இவ் வாண்டிற்கான திட்டங்களை அமுலாக்குவதற்கு 120 லட்சம் ரூபாவை வட, கிழக்கு மாகாணசபையிடம் இருந்து பெறுவதற்கும் நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. 47

## பங்களாதேஷ் தலைமை அமைச்சர் இந்தியா செல்ல இருக்கிறார்

கங்கை நதி நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக பங்களா தேஷ் தலைமை அமைச்சர் பேகம் காலிதா ஸியா அம்மையார் இன்னும் இரண்டு வாரங்களில் இந்தியா செல்ல இருக்கிறார்.

கங்கை நதி நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக இந்திய பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் சம்மதித்த இந்த தாராளமனது பற்றி கருத்து வெளியிட டாக்கா நகர அரச அதிகாரிகள் மறுத்து விட்டார்கள்.

...ருவதற்கான உரித நடவடிக்கைகளை யாழ் செயலகம் ... களங்களைப் பணித்துள்ளது. (47)

## ★ பெனாசிர் பூட்டோவின் கணவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டார்

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி பெனாசிர்பூட்டோவின் கணவர் நாடாளுமன்றக் கீழ்ச் சபை அமர்வில் நேற்று கலந்து கொண்டார். சிறையில் இருக்கும் இவர் இதற்காகக் கராச்சி நகரில் இருந்து இஸ்லாமாபாத்துக்குக் கொண்டுவரப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரான இவர் ஆள் கடத்தல் கொலை ஆகியவை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஓராண்டுக்கு மேலாகச் சிறையில் இருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் இவர் மறுத்துள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ள நீதிமன்றம் மறுத்த போதும் அரசு ஒரு சிறப்புச் சலுகையாக நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளது.

### பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு

# தமிழர் அனுமதிக்கப்படுவதை நிறுத்தக் கோரிக்கை!

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி பல்கலைக் கழக பௌத்த போதனாசிரியர்கள் சங்கம் அதிரிய, மகிந்த பீடாதிபதிகளைக் கேட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்பொழுது உள்ள போதனாசிரியர்களில் 75 சதவீதமானோர் சிங்களவர்களாக இருந்தபோதிலும் கடந்த சில வருடங்களாக அங்கு அனுமதிக்கப்படும் தமிழ் மாணவர்களின் தொகை அதிகரித்து வருகின்றன. இதனால் சிங்கள மாணவர்களின் கலாசாரம், நலன், தனித்துவம் என்பன பாதிப்புறும் அபாயம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தோன்றியுள்ளதாக மேற்படி பௌத்த போதனாசிரியர்கள் சங்கத்தின் இது குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழ் மாணவர்களின் தொகை அதிகரிப்பதை அரசிடம் கோரிக்கை விடுவதன் மூலம் தடுக்க முடியுமென நாம் நம்பவில்லை. ஆனால் எமது இக் கோரிக்கையை நிறைவேற்றச் செய்யத் தூண்டும் வலிமை பௌத்த பீடாதிபதிகளாகிய உங்களிடம் மட்டுமே உள்ளது என நாம் நம்புகின்றோம்" எனவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**பதவிவெற்றிடம்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. பயிராக்கவியல்/ விவசாய உயிரியல்/ விவசாய இரசாயனவியல்/விவசாயப்பொறியியல்/ மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.
2. பயிராக்கவியல்/ விவசாய உயிரியல்/ விவசாய இரசாயனவியல் /விவசாயப் பொருளியல்/விவசாயப்பொறியியல்/ மிருக விஞ்ஞானத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. சித்தமருத்துவத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. பயிராக்கவியல்/ விவசாய உயிரியல்/ விவசாய இரசாயனவியல்/விவசாயப்பொறியியல்/ மிருக விஞ்ஞானம்/ விவசாயப் பொருளியலில் தற்காலிகச் செய்முறை காட்டுநர்.

துறைத் தலைவரினா

சம்பள அளவுத் திட்டம்

(1) பேராசிரியர்:- ரூபா 12. .00 - 6× 300 14. 000/= (மாதமொன்றுக்கு)
(2) சிரேஷ்ட விரிவுரையாளர்:- தரம் 11: ரூபா 8, 000-5×250 9, 250/= (மாதமொன்றுக்கு)
(3) உதவி விரிவுரையாளர்: ரூபா 3. 900/= மாதமொன்றுக்கு (நிலையானது)
(4) தற்காலிகசெய்முறை காட்டுநர்: 3,250/= மாதமொன்றுக்கு (நிலையானது)

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1992 07. 24 ஆகும் ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1992. 06. 22 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால்மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 X 10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிடு ரூபா 2/= முத்திரை ஒட்டப் பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித் தனி விண்ணப்பங்கள்


## சைவச் சிறார் இல்ல திறப்பு விழா

இந்துசமயப் பேரவையின் சைவச் சிறார் இல்லத் திறப்பு விழா 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கைதடியில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்விழாவில் ஆசியுரை வழங்க, 'சிவத்தமிழ்ச் செல்வி' பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி இல்லத்தைத் திறந்து வைப்பார்.

இல்ல ஸ்தாபகர் ஆறுமுகம் கந்தையா அவர்கள் விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

## ஒஸ்ரியா சிறைச் சுவர்களில் தலைவரை வாழ்த்தும் சுலோகங்கள்!

சட்டவிரோதமாக ஜேர்மனிக்குள் புக முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட பல இலங்கைத்தமிழர்கள் ஒஸ்ரியா நாட்டின் தலைநகரான வியன்னாவிலுள்ள சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சிறைகளில் பல இலங்கைத் தமிழ்க் குடும்பங்களும் உள்ளன.

இந்தச் சிறை அறைகளின் சுவர்களில் எல்லாம் தமிழில் எழுதப்பட்ட பல சுலோகங்களைக் காணலாம்.

சில இடங்களில் 'தமிழீழம் வாழ்க' என்ற சுலோகம் காணப்படுகின்றது. சிறைச் சுவர்களின் பல இடங்களில் ஆங்கிலத்திலும், தமிழிலும் பெரிய அளவில் 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்க' என்ற சுலோகங்கள் காணப்படுகின்றன.

ஜேர்மன் நோக்கிச் செல்கையில் முதலில் ருமேனிய இராணுவத்திடமிருந்து தப்ப வேண்டும். அவர்களிடம் அகப்பட்டால் அடி, உதை வேண்ட வேண்டும் அவர்களிடமிருந்து தப்பி ஒஸ்ரியாவுக்குள் நுழைவோர் அங்கும் பல சோதனைகளை எதிர்நோக்க வேண்டும்.

ஒஸ்ரிய பொலிஸாரிடம் சிக்கிக் கொள்வோரே இந்தச் சிறைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

பல நாள் பயணம், பயம், புதிய சூழல் இப்படிப் பல்வேறு அனுபவங்களுடன் வியன்னா சிறைகளுக்குள் தள்ளப்படும் இலங்கைத் தமிழர்களுக்கு, அங்கு முன்னர் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழர்களால் எழுதப்பட்ட இந்த சுலோகங்கள் பெரும் ஆறுதலும், தெம்பும் அளிப்பனவாகவே அமைந்துள்ளன.

இச் சிறையைத் தாண்டி தற்பொழுது ஜேர்மனிக்குச் சென்றுள்ள முரசொலி ஆசிரிய பீடத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இந்தத் தகவல்களை எமக்கு அறியத்தந்துள்ளார்.

## தென்பகுதியில் நேற்று கடும் மழை, காற்று!

மேல்மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் நேற்று முழு நாளும் கடும் மழை பெய்ததாக அறிவிக்கப்படுகின்றது.

சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளிலும் நேற்றுக் கடும் மழை பெய்துள்ளது.

களுத்துறைப் பகுதியில் நேற்றுக் ஆகக்கூடுதலாக 112 மில்லி மீற்றர் மழையும் கட்டுநாயக்காவில் 89 9 மில்லி மீற்றர் மழையும் இரத்மலானையில் 71.3 மில்லி மீற்றர் மழையும் கொழும்பில் 67 4 மில்லி மீற்றர் மழையும் பெய்துள்ளது.

களுத்துறைப் பகுதியில் நேற்றுக் கடும் காற்று வீசியதில் 100 வீடுகள் சேதமுற்றன.

நாவலைக்கு அப்பால் மண் சரிவால் மலையக ரயில்சேவை பாதிக்கப் பட்டிருந்தது

### மகாஜனா சாதனை

அண்மையில் வெளியான க. பொ. த சாதாரணதர (1990) பரீட்சை பெறுபேறுகளில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவர்கள் எழுவர் 6 பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

ஒன்பது மாணவர்கள் ஐந்து பாடங்களிலும், ஐவர் நான்கு பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

## ஆயர் குழுவினர் யாழ். நகரைச் சுற்றிப் பார்த்தனர்

யாழ்ப்பாணம் வந்திருக்கும் ஆயர் குழுவினர் கடந்த திங்கள் யாழ் நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்த பகுதிகளையும் மற்றும் பொது நூலகம், கோட்டைப்பகுதிகளையும் ஆயர் குழுவினர் சுற்றிப்பார்வையிட்டனர்.

## வரலாற்றுச் சான்றுகளை வரைபடமாக ஆவணப்படுத்த முயற்சி

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சான்றுகள் கவனிப்பாரற்ற நிலையில் அழிந்து வருவதால் இவற்றைத் தமிழீழம் இழந்து விடக்கூடிய நிலை உருவாகியுள்ளது. இதனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின், கட்டிடங்களின் மாதிரிப் படங்கள், இடத் தோற்ற, பக்கத் தோற்ற வரைபடங்கள் போன்றவற்றை வரைந்து சேகரிப்பதும் படுத்தும் முயற்சியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அங்கமாகிய தேசநிர்மாணிகளின்

ஊரை மத்தியாகக் கொண்ட கரைசார பிரதேசத்திற்குட்பட்ட சங்கிலி மன்னன் தோப்பு அளவீடு செய்யப்பட்டு இதற்கான மாதிரிப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சரித்திரத் தொடர்புள்ள நீர் நிலையான யமுனா ஏரி பற்றிய மாதிரிப்படங்கள், அளவிடப்பட்டங்கள் என்பனவும் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நல்லூர் கரைசார பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மந்திரி மனை பற்றிய அளவீடுகளும், மாதிரிப் பட

## உப்புக் கூட்டுத்தாபனம் மக்கள் மயமாக்கப்பட்டது

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் "லங்கா சோல்ட் லிமிடெட்" என மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது

இத் திட்டத்திற்கு இணங்கவும் வடபிராந்தியத்தில் உள்ள ஆனையிறவு. குறிஞ்சாத்தீவு உப்பளங்கள் 1990 ஆடி முதல் இயங்காமல் இருப்பதாலும், உடனடியாக அவற்றை இயங்கவைக்கும் சாத்தியங்கள் இல்லாமையாலும் 1992 ஜனவரி முதல் சம்பளங்கள் வழங்குவதில் தடங்கல்கள் இருப்பதாலும் வடபிராந்தியத்தில் உள்ள ஊழியர்கள் புதுமுறை அறிக்கையின் பிரகாரம் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என தலைமை அலுவலகத்தில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

லும், பீடாதிபதியினாலும் ஓராண்டு காலத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண்) எனும் பதவிப் பெயர் அளிக்கமுடியும் என்பதுடன் துணைவேந்தரால் மாதமொன்றுக்கு 4500-10×200-6500/= சம்பள அளவுத்திட்டத்திலும் வைக்கப்படுவர்.

அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ கல்வி அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992 - 05 - 08

05026

பொறியியல் மதியுரைஞகம் செயற்பட்டு வருகிறது

இம்முயற்சியின்கீழ் நக ...களும் தயாரிக்கப்படவுள்ளன.

# இராணுவ முகாமைச் சுற்றி சிங்களக் குடியேற்றம்

கல்குடாவில் இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் பெரும்பான்மை இனமக்கள் குடியேற்றப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கல்குடா இராணுவ முகாமைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் பாதுகாப்புக் காரணத்தை முன்விட்டு தத்தமது வீடுகளைக் கைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றுள்ளதால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் வீடுகளில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு வட பிராந்திய ஊழியர்களையும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் 19 05 92 பளை, 20 05 92 முரசுமோட்டை அலுவலகங்களில் காலை 10 00 மணிக்கு ஒன்றுகூடும்படி வட பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

பிராந்திய முகாமையாளர்
வட பிராந்தியம்

லங்கா சோல்ட் லிமிடெட்,
ஆனையிறவு

05025

# கறுப்புப் பூனைகளுக்கு எதிராக உலக நீதிமன்றில் வழக்கு!

"கறுப்புப் பூனைகள்" என அழைக்கப்படும் ஆயுத அமைப்புக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுவதாக 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கறுப்புப் பூனைகளினால் சுமார் 800 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனாலேயே இவ் விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்தில் வாரம்பமுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மகிந்த இராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இதுவிடயத்தில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் உதவியும் பெறப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## சிறிய செய்திகள்

### வெற்றி தோல்வி இல்லை

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

ஆரம்ப முதல் வெகு போட்டா போட்டியாக இருந்த இவ் ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதியது. இரு அணிகளும் தலா ஒரு கோலை மாத்திரம் போட்டதினால் ஆட்டம் 'ட்றோவில்' முடிவுற்றது. (16)

### உலக சூழல் பாதுகாப்பு தினம்

உலக சூழல்பாதுகாப்பு தினம் எதிர் வரும் ஜூன் 5 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதையடுத்து செப்டம்பர் 18 முதல் 21 ஆம் திகதி வரை உலகின் 100 நாடுகள் சூழல் பாதுகாப்புக்காக சுத்திகரிக்கப்படும்.

### மேலதிக அதிகாரி சென்னையில்

ராஜீவ் கொலை பற்றிய விசாரணைகளை மேற் கொண்ட இந்தியப் பொலிஸின் விசேட விசாரணைப் பிரிவின் முடிவுகள் குறித்து ஜெயின் கமிஷன் விசாரணை நடத்த உதவும் பொருட்டு இந்திய அரச பொலிஸ் மா அதிபர் தரத்திலான ஒரு பொலிஸ் அதிகாரியை தமிழகத்துக்கு அனுப்பியுள்ளது.

### நமீபிய அழகி தெரிவு

நமீபிய அழகுராணியான 19 வயதுடைய மிச்செல் மெர்லின் தாய்லாந்தில் நடைபெற்ற கண்கவர் போட்டி யொன்றில் உலக அழகுராணியாக முடி சூட்டப்பட்டார்.

கொலம்பிய அழகுராணியான 21 வயது மாணவி பவோலா இரண்டாவதாகவும், இந்திய அழகுராணியான 20 வயது மதுரு சாப்ரே மூன்றாவதாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான பரிசுப் பணத்தையும், பரிசுப் பொருள்களையும் உலக அழகுராணி பெறுவார்.

### நாடு பூராவும் வன அபிவிருத்தி

காடுகளின் அபிவிருத்திக்காக நாடளாவிய ரீதியில் வன அபிவிருத்தித் திட்டங்களை அரசு நடைமுறைப் படுத்தவுள்ளது.

### பாக். கப்பல்கள் கொழும்பில்

பாகிஸ்தான் கடற்படையைச் சேர்ந்த இரண்டு யுத்தக் கப்பல்கள் மூன்று நாள் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

### நிலக்கடலை செய்கை பாதிப்பு

தற்போது நிலவும் வறட்சி காரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நிலக்கடலைச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. 1 அந்தர் விதை நிலக்கடலைக்கு அனைச்சலாக சராசரி மூன்று அந்தர் மட்டுமே கிடைத்துள்ளது.

## தமிழிசை விழா தலைவர் பிரபாவுக்கு கலைஞர்கள் நன்றி

போர்க்கால சூழ்நிலையிலும், கர்நாடக இசையின் பால் மக்களுக்கு ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்தக்கூடிய வகையில், நல்லூரில் முன்னெப்போதும் இல்லாதவாறு மழையையும் பொருட்படுத்தாது, வெள்ளம் போல தமிழர் கூடியிருந்து ரசிக்கவும் தக்க ஓர் எழுச்சி விழாவாகவும், முத்தமிழ் விழாவின் முன்னோடி விழாவாகவும் இனிது நடத்திய விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்துக்கும் இன விடுதலையையும், கலை வளர்ச்சியையும் இரு கண்களாக மதித்து இப் பெருவிழாவுக்குத் தமது ஆசியையும், பேராதரவையும் நல்கிய தலைவர் வே. பிரபாகரனுக்கும் தமிழீழக் கலைஞர்கள் தமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

## யாழ். மருத்துவபீட பரீட்சையில் சித்திபெற்றோர் விவரம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் MBBS பரீட்சையில் (1992 மார்ச்) சித்திபெற்றோரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் MBBS (பகுதி 1) பரீட்சையில் சித்திபெற்றோர் விவரம் வருமாறு:-

செல்வி எஸ். செல்லையா, கே. சுஜந்தன், எம் பாலச்சந்திரன், செல்வி பி. ரேணுகா, செல்வி பி. அம்பிகா, வி. ஞானரட்ணம், எஸ். இளங்கோ, எஸ் பிரபாகரன், செல்வி கே. ராதா, செல்வி எஸ். ஜெயாலிங்கம், கே. வி. ஸ்ரீ கௌரீஸ்வரன், செல்வி கே. திருமகள், எஸ். தயாபரன், வி. தேவகுமார், செல்வி கே. தயாளினி.

## முதலாந்தர அனுமதிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாந்தரத்தில் பிள்ளைகளை புதிதாக அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரமான வதிவிடத்திற்கு மிக அண்மையிலுள்ள பாடசாலை அதிபர்களுக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு உயர்கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி அன்று 5 வயது பூர்த்தியானவர்கள் அதாவது 1988 ஜனவரி 31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த பிள்ளைகளே அனுமதி பெறத் தகுதியானவர்களாவர்.

## வெளிநாட்டுக் கம்பனிகளின் சொத்துக்கள் பறிமுதல்

வளைகுடாப் போருக்கு முன் ஈராக்கில் இயங்கிக் கொண்டிருந்த வெளிநாட்டுக் கம்பனிகளின் சொத்துக்களை ஈராக் பறிமுதல் செய்ய ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்களைத் தொடர்வதற்கு அன்னியக் கம்பனிகள் தவறிவிட்டமையே இம் முடிவுக்குக் காரணமென தெரிவிக்கப்பட்டது.

ஈராக் இன்னமும் தடைக்குட்பட்டிருப்பதால் தொடங்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

## அதி உயர்கிராம உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை

அரசின் புதிய திட்டத்திற்கு அமைய ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒவ்வொரு தொகுதிக்கும் தலா ஒவ்வொரு முதற்தர கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

முதலாம் தரத்துக்கான காலியாகவுள்ள இடங்களில் 80 சதவீதம் மாகாணசபைகள் அரச சேவைக் கமிஷனால் போட்டிப் பரீட்சை மூலமும், மிகுதி 20 சதவீதமும் 17 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்துள்ள ஆகக்கூடிய முழுச்சம்பளத் திட்டத்தைப் பெற்றுக் கொள்பவர்களிடமிருந்தும் சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு நிரப்பப்படும்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் உயர்தரத்தில் உள்ள ஒரு கிராம உத்தியோகத்தர் வீதம் நியமனம் மேற்கொள்ளப்படும்,

முதலாம் தரத்தில் குறைந்தது மூன்றாண்டுகள் சேவை செய்துள்ளவர்களில் 80 சதவீதமானோர் போட்டிப் பரீட்சை மூலமும் மிகுதி 20 சதவீதமானோரும் குறைந்தது 20 வருடகால சேவையை பூர்த்தி செய்து அதில் 1 ஆம் தரத்தில் குறைந்தது 5 வருடங்கள் சேவை செய்தவர்களிலிருந்து சேவை மூப்பு அடிப்படையில் அதி உயர் கிராம உத்தியோகத்தர் சேவைக்குத் தெரிவு செய்யப்படுவர். 06

## இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் 21 ஆம் திகதி சென்னை வருகிறார்

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இம்மாதம் 21 ஆம் திகதி சென்னை வரவுள்ளார்.

இவர் ஸ்ரீபெரம்புதூரில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட இடத்தில் அன்று நடைபெறவுள்ள நினைவுக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

இவர் அன்றைய தினம் தமிழக முதல்வரையும் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முருகனின் பளிங்குச்சிலை சிவநகரில் கண்டுபிடிப்பு!

கிளிநொச்சி - உருத்திரபுரத்திலுள்ள சிவநகர் பகுதியில் பண்டைய கால தமிழ்ப் பண்பாடுகளை எடுத்துக் காட்டும் பல தெய்வச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிவநகர் சிவன்கோயில் கட்டிட வேலைகளுக்காக நிலம் தோண்டப்பட்ட சமயம் இவை புதையுண்ட நிலையிலிருந்து மீட்கப்பட்டன,

இவற்றில் பல தெய்வச் சிலைகள் உடைந்த நிலையிலும் முழுத்தோற்றங்களுடனும் கண்டெடுக்கப்பட்டுள்ளன,

பளிங்குபோன்ற கற்களில் செதுக்கப்பட்ட முருகன் சிலை தங்கப்பவுணினால் ஆன பொட்டு ஒன்றுடன் இருக்கக் காணப்பட்டது.

இவற்றை இக்கோயில் தர்ம கர்த்தாசபையினர் மக்கள் பார்வைக்கு வைத்துள்ளனர். (31)

## சாவியும் கைதானார்

பிரபல தமிழகப் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான "சாவி" (சா. விஸ்வநாதன்) நேற்று முன்தினம் சென்னையில் கைது செய்யப்பட்டார்.

இவர் ஆசிரியராக உள்ள 'சாவி' வார இதழின் அட்டைப் படத்தில் பெண்ணின் உருவப்படத்தை ஆபாசமாக வெளியிட்டமைக்காகவே சாவி கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவருடன் "சாவி" பத்திரிகையின் இணை ஆசிரியர், பதிப்பாளர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

## புல் எண்ணெய்

கற்பூரப் புல்லில் இருந்து எண்ணெய் வடிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை முல்லைத்தீவு பிரதேச கிராமிய உற்பத்திக்குழுக்கள் மேற் கொண்டுள்ளன. வடித்துப் பெறப்பட்ட புல் எண்ணெய் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின ரால் பரிசோதனை செய்யப் பட்டு வருகிறது.

# பிடிவிறாந்தை இரத்துச் செய்ய டில்லி பத்திரிகையாளர் கோரிக்கை

தமிழகத்தில் மூன்று பத்திரிகையாளர்களுக்கு எதிராக தமிழக சட்டசபை சபாநாயகர் பிறப்பித்துள்ள பிடிவிறாந்தை இரத்துச் செய்ய உடனடி நடவடிக்கையெடுக்குமாறு லோக்சபா சபாநாயகரிடம் டில்லி பத்திரிகையாளர் சங்கம் கேட்டுள்ளது.

சட்டமன்றங்கள், பத்திரிகைகள், நீதித்துறைகள் ஆகியவற்றுக்கிடையேயான உறவுகளைப் பாதிக்கும் விடயங்கள் பற்றி ஆராய அனைத்து சபாநாயகர்களுக்குமான கூட்டமொன்றைக் கூட்டுமாறும் இச் சங்கம் லோக்சபா சபாநாயகரைக் கேட்டுள்ளது.

# '100 சிங்கள சிறுவர்களை சைவ பூசகர்களாக்க முன்வருவாரா?'

பௌத்தமதம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட 2500 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு அடுத்து வரும் பொஸன் பௌர்ணமி தினத்தன்று 100 தமிழ் சிறுவர்களையும் பௌத்த பிக்குகளாக தீட்சை செய்விக்க வேண்டுமென்ற பிக்குமார் சங்கத்தின் அறிக்கை பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இது குறித்து கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு வாசகர் ஒருவர் எழுதியுள்ள கடிதமொன்றில்

"இந்த அறிவிப்பு ஏற்கனவே பல வழிகளிலும் மனம் நொந்துபோயிருக்கும் தமிழ் மக்களின் மனதில் மேலும் பீதியையும் சந்தேகத்தையும் உருவாக்கும் ஒரு பயங்கரத் தகவலாக அமைகிறது.

"100 தமிழ் சிறுவர்களை பிக்குகளாகச் சேர்த்துக் கொள்ளும் இந்த ஆலோசனை இந்து மதத்துக்கு பயங்கரமான விடுக்கப்பட்ட ஒரு சவால் என்றே நினைக்க வேண்டியுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் சில பௌத்த ஆலயங்கள் அழிக்கப்படுவதற்கு, தமிழர்கள் பௌத்த பிக்குகளாகஇல்லாமலிருந்ததே காரணம்என்பது சரியானால் 1983 ஆம் ஆண்டுவன்செயலின்போது நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்கள் நாசம் செய்யப்பட்டதற்கும்சிங்களவர்கள்பூசகர்களாக இல்லாமலிருந்ததுதான் காரணமாயிருக்கவேண்டும்"

"100 தமிழ் சிறுவர்களை பௌத்த பிக்குவாக சேர்த்துக்கொள்ளும் அதே வேளையில் 100 சிங்கள சிறுவர்களை சைவப் பூசகர்களாக பயிற்றுவிக்கவும் பிக்குமார் சங்கம் முன்வருமா?"

"எது எவ்வாறாயினும் இந்து கலாசார அமைச்சும், அகில இலங்கையிலும் உள்ள இந்து அமைப்புக்களும் இவ் விடயத்தில் தமது எதிர்ப்பை உடனடியாக தெரியப்படுத்த வேண்டும். தவறின் அது இந்த சமயத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகவே அமையும், எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆரம்பக்கல்வி பயிலுநர் ஆசிரிய தகுதிகாண் பரீட்சை

ஆரம்பக்கல்வி பயிலுநர் ஆசிரியர்களை நியமிப்பதற்கான தகுதி காண் பரீட்சை யூலை 20 ஆம் திகதி இலங்கையிலுள்ள சகல மாவட்டங்களிலும் நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்து உள்ளதாக அறிவித்துள்ளது.

பரீட்சை நிலையங்களை தெரிவுசெய்து அதிபாடசாலை அதிபர்களுக்கு அறிவித்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 49

அளவெட்டியைச் சேர்ந்த
இறை குமாரன்,உமை குமாரன்அவர்களின்
பத்தாம் ஆண்டு நினைவையொட்டி

## மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

27-05-1992 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு மேற்படி போட்டிகள் நடைபெற உள்ளன.

மரதன் ஓட்டம்-10 மைல், சைக்கிள் ஓட்டம்-50 மைல் (ஆண்கள்), பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரும் அளவெட்டி மகாஜன பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் உள்ள மகாஜன சபை மண்டபத்தின் முன் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

போட்டிகளில் தமிழீழத்தில் உள்ள அனைவரும் பங்குபற்றலாம். போட்டியின் மேலதிக விதிகள் ஆரம்ப இடத்தில் தரப்படும். போட்டி நடைபெறும் தினத்திலேயே போட்டிக்கான அனுமதியை பெற்றுக் கொள்ளலாம்,

மகாஜனசபை, அளவெட்டி,

05027

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 13-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

● யாழ்ப்பாணம், கிளிநொச்சி மருந்துக்களஞ்சியத்தில்

# இரு வாரங்களுக்குப் போதுமான மருந்து வகைகளே கையிருப்பில்

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள மருந்துக் களஞ்சியத்தில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே தேவையான மருந்து வகைகள் இருப்பதாக யாழ் சுகாதாரத் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது.

1992 ஆம் ஆண்டிற்கான 6 மாத காலப்பகுதிக்கான மருந்துகள் கப்பலில் கொண்டுவரப்பட்டும் அவை தற்போது முடியும் தறுவாயில் உள்ளன.

குமண கப்பல் மூலம் கொண்டுவரப்படும் மருந்து வகைகள் இக்கப்பல் தற்போது பருத்தித்துறை வருவது தாமதம் ஏற்படுவதால் மருந்து வகைகளும் யாழ்ப்பாணம் எடுத்துவருவதில் காலதாமதம் ஏற்படுவதாக அவ் வட்டாரம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிளிநொச்சிப் பகுதிக்கு தரைவழியாகக் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மருந்து வகைகள் எடுத்துவரப்படாததினால் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் அபாயம் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த யாழ்ப்பாணம் வரவிருக்கும் குமண கப்பலில் மருந்து வகைகளை எடுத்துவரப்படுவதற்காக யாழ்.சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு விரைந்துள்ளது. (47)

## கோமாரியில் தபால் பொதிகள்

கொழும்பில் இருந்து பருத்தித்துறையை வந்தடைய விருக்கும் கோமாரி கப்பலில் 271தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

இக்கப்பல் நாளை பருத்தித்துறையை வந்தடையலாம் எனவும் அவ் வட்டாரம் மேலும் தெரிவித்தது (47)

## உதவிப் பணம் வழங்கல்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கசரோக, புற்றுநோய், தொழுநோயாளர் உதவிப்பணம் நல்லூர் உதவி அரச அதிபர் பணிமனையில் இன்று காலை 9 மணி தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

## தையற் பயிற்சி

வலிகாமம் மேற்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினர் சங்க மண்டபத்தில் சுமார் 132 யுவதிகளுக்கு தையற் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.

இவ் வகுப்புக்களில் வட்டுக்கோட்டை, சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, அராலி, மூளாய், பொன்னாலை, பண்ணாகம் முதலான கிராமங்களைச் சேர்ந்த யுவதிகள் பங்குபற்றி பயிற்சி பெற்று வருகின்றனர். (18)

## இந்திய...

உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அமெரிக்கா மீது கடும் கண்டனங்களை வெளியிட்டனர்.

திட்டமிடப்பட்டுள்ள அமெரிக்க - இந்திய கடற்படைக் கூட்டுப்பயிற்சியை கைவிடுமாறு கம்யூனிஸ் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கையை விடுத்தனர்,

## நடேஸ்வரக் கல்லூரி சிறந்த பெறு பேறுகள்

க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுள்ளது, ஒரு மாணவர் 7 அதிவிசேட சித்திகளையும் இரண்டுமாணவர்கள் ஐந்து அதிவிசேட சித்திகளையும், ஒரு மாணவர் நான்கு அதிவிசேட சித்திகளையும் பெற்றுள்ளனர்,

இவை தவிர ஒரு விசேட சித்தியும் ஏழு திறமைச் சித்தியும் பெற்ற பன்னிரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்,

பொதுவாக இருபத்தி ஒரு மாணவர்கள் க. பொ. த. உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர்,

கடந்த வாரம் வெளியாகிய 1991ஆம் ஆண்டுக்குரிய பரீட்சையில் முப்பத்தி ஒருவர் க. பொ. த. உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 20

● போரில் அமெரிக்கா கைபற்றியது

## ஜப்பான் தனது தீவை மீள ஒப்படைக்க கோருகிறது

ஜப்பானிய தீவான ஒகினாவாவை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்குமாறு ஜப்பான் அமெரிக்காவை கோரியுள்ளது இதையடுத்து இருநாடுகளிடையேயும் தற்போது பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.

இரண்டாம் உலகப்போரின் போது கேபிக்கீவான ஒகினாவாவை ஜப்பானிய இராணுவத்திடமிருந்து அமெரிக்க இராணுவம் கைப்பற்றிக் கொண்டது.

தற்போது இந்த தீவில் அமெரிக்காவின் மிகப்பெரும் படைத்தளம் ஒன்று உள்ளது,

இதிய தீவாகையால் தனித்தில் அமெரிக்கப்படையினர் துப்பாக்கிச் சூடு பயிற்சி எடுக்கும் போது சன்னங்கள் குடிமனைகளினுள்ளும் பாய்வதாக இத்தீவு வாசிகள் முறையிடுகின்றனர்.

1945 இல் இந்தத் தீவை அமெரிக்கா கைப்பற்றிய போது தீவு வாசிகளின் மூன்றில் ஒரு பகுதியினர் பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது,

சோவியத் வீழ்ச்சியை அடுத்து ஆசியாவில் உள்ள படையினரைக் குறைக்க அமெரிக்கா திட்டமிட்டது. இதன்படி ஏற்கனவே கணிசமான தொகையான படையினர் இத்தீவை விட்டு வெளியேறியுள்ளனர்,

## கருணாநிதி கண்டனம்

பத்திரிகை ஆசிரியர் ஒருவர் சட்டப்பேரவையால் கைது செய்யப்பட்டது தமிழக சட்டப்பேரவை வரலாற்றில் இதுவே முதற்தடவை என முரசொலி ஆசிரியர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மு. கருணாநிதி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## கிணற்றில்வீழ்ந்து மரணம்

கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது கப்பி விழுந்ததினால் இளம் கர்ப்பிணி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் நேற்று கொக்குவில் மேற்கு பகுதியில் இடம் பெற்றது. (47)

## சிவவாகீசர் மணிவிழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபையின் பொதுச்செயலாளரும் மட்டுக்கேட்டை திருஞானசம்பந்த வித்தியாலய அதிபருமாகிய திரு சு சிவவாகீசர் அவர்களின் மணிவிழா இன்று நடைபெறவுள்ளது

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு. நம. சிவப்பிரகாசம், கலை ரோசு ஏ. ரீ பொன்னுத்துரை, திரு ந. இளையாலங்கேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

## சந்தியாகோ முன்னணியில்

பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்குகள் எண்ணப்பட்டுவரும் இவ்வேளையில் பெண்மணியான மேரியம் சந்தியாகோ முன்னணியில் இருப்பதாகவும் இவரைதொடர்ந்து சிறிய வாக்கு வித்தியாசத்திலேதற்போதைய ஜனாதிபதி அக்கியூனோவின் ஆதரவுபெற்ற முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ராமோஸ் இரண்டாவது இடத்திலும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.